Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 10

வாரம் 39

### தனிப்பாடல்கள்

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**பங்கப் பழனத் துழுமுழவர்**
**பலவின் கனியைப் பறித்ததென்று**
**சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
**தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா**
**கொங்கர்க் கமரா பதியளித்த**
**கோவே யிராச குலதிலகா**
**வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்**
**மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே**

(1) இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர்** :
- **அவருக்குப் புகழ்சேர்க்கும் நூல்** :
- **தமிழுலகில் அவரை எவ்வாறு அழைப்பர்** :

(2) பின்வரும் தொடர்களைச் சந்தி பிரித்தெழுதுக

- **சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
- **கொங்கர்க் கமரா பதியளித்த**

(3) **பழனம்** என்பது குறிக்கும் **மறுபெயர்கள்** மூன்று தருக

(4) உழவர்களின் செயல் எதுவெனக் கூறப்படுகின்றது

(5) **பிறை** என்பது குறிக்கும் மூன்று கருத்துக்களையும் குறிப்படுக

(6) இங்கு குறிப்பிடப்படும் **சோழ மன்னன்** யார்

(7) சோழ மன்னனின் **நாட்டு வளச்சிறப்பு** யாது

(8) சோழ மன்னனின் **அறச் செயலாகக்** கருதப்படுவது யாது (வீரச் **சிறப்பாகக்** கருதப்படும்)

(9) இப்பாடலில் புலவர் குறிப்பிட வந்த விடயம் யாது?

பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக

1. **கொங்கர்க் கமரா பதியளித்த**
   **கோவே யிராச குலதிலகா**
   **(அ) அமராபதி என்பதன் கருத்து யாது**
   **(ஆ) இராச குலதிலகா என்பதால் நீர் கருதிக் கொள்வது யாது**

2. **வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்**
   **மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே**
   **(அ) அப்பு இறைக்கும் என்பதன் கருத்து யாது**
   **(ஆ) இப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணியினை விளக்குக**

**(3) பங்கப் பழனத் துழுமுழவர்**
**பலவின் கனியைப் பறித்ததென்று**
**அ) பங்கப் பழனம் என்பதன் கருத்து யாது**
**(ஆ) பலவின் கனி எனக்குறிப்பிடப்பட்டது எதனை**

**(4) சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
**தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா**
**அ) குரங்கின் செயல் யாது**
**(ஆ) தமிழ்நாடா என்பதால் நீர் கருதிக் கொள்வது யாது**